லாம். விவரம் இல்லையென்றால் பதில் சொல்லாமல் இருந்துவிடலாம். அதற்காக தவறான தகவலை இந்த மன்றத்திற்கு கொடுப்பது முறையாகாது. அப்படி கொடுத்திருந்தால், பிறகு திருத்திக்கொள்வதுதான் இந்த அவையின் மரபாகும். பல அமைச்சர்கள் திருத்திக்கொள்வதில்லை அதைப் பேரவைத்தலைவர் அனுமதித்துக்கொண்டே இருந்தால், சட்ட சபையில் தவறான தகவலை பற்றியே பேசிக்கொண்டிருப்பதாகப் பொது மக்கள் கருத வாய்ப்பு ஏற்படுகிறது. ஆகவே, இனிமேல் அவ்வாறு ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்கிற ஒழுங்கு பிரச்சினையை எழுப்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத்தலைவர்: நீங்கள் எதைக் குறிப்பிடுகிறீர்கள்? மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரவர்களிடம் நீலகிரி மாவட்டத்திலே பாக்கு உற்பத்தி இருக்கிறதாவென்று கேட்டார்கள். அது போல இல்லை என்று அமைச்சர் சொன்னார். பொம்மன் அவர்கள் கூடலூரில் ஒரு பகுதியில் இருக்கிறது என்று சொன்னவுடன், அமைச்சரவர்கள் பெரிய அளவிலே இல்லையென்று தான் சொன்னதை மாற்றிக் கொண்டார். ஆகவே, அதிலே ஒன்றும் தவறில்லை.

(3) கவன ஈர்ப்பு.

புகலூர் சர்க்கரை ஆலையில் ஏற்பட்டுள்ள வேலை நிறுத்தமும் அதனால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள நட்டமும் குறித்து.

திரு. பெ. சௌந்திரபாண்டியன்: தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம், புகலூர் சர்க்கரை ஆலையில் தொடர்ந்து வேலை நிறுத்தம் நடைபெற்று வருவதால் பல ஏக்கரா நிலங்களில் உள்ள கரும்பு வாடி விட்டது பற்றியும் கரும்பு சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்குப் பெரும் நட்டம் ஏற்படும் நிலைமையும் குறித்து அவசர பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசாராம்: புகலூர் ஆலையைப் பொறுத்த வரையில் வேலை நிறுத்தம் நீங்கிப் போய்விட்டது. கரும்பு இப்பொழுது சர்க்கரை ஆலைக்கு வந்து கொண்டிருக்கிறது. நிலைமை சுமுகமாக இருக்கிறது.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, புகலூரில் டெக்கான் சர்க்கரை ஆலை, 22—12—74 முதல் 15—2—1975 வரை 55 நாட்களாக நடைபெற்ற வேலை நிறுத்தம் காரணமாக, கரும்பு அரைக்கவில்லை. 15—2—1975 முதல் மீண்டும் இவ்வாலையில் வேலை தொடங்கியுள்ளது. பதிவு செய்யப்பட்டுள்ள எல்லா கரும்பையும் இவ்வாலை அரைத்து விடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாலை 1—10—74 முதல் 22—12—1974 முடிய 112,000 டன் கரும்பை அரைத்துள்ளது,

இன்னும் 120,000 டன் கரும்பை இந்த ஆலை அரைக்க வேண்டியுள்ளது. இந்த அரைவை வேலை, மே மாதம் மூன்றாவது வாரத்திற்குள் முடிந்து விடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, கரும்பினை உரிய காலத்தில் வெட்டி அரைவைக்குக் கொண்டு வராத காரணத்தால் கரும்பிலே இருக்கிற சாறுகள் அதிகம் வற்றிவிடுகின்றன. ஆகவே, விவசாயிகளுககுப் பெருத்த நட்டம் ஏற்படக் கூடிய சூழ்நிலையிருக்கிறது. அதற்கான நட்ட ஈட்டை அரைவை முதலாளிகளிடம் வாங்கித்தர அரசாங்கம் ஏதாவது ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: புதிய பார்கவா கமிட்டியினுடைய ரெக்கமண்டேஷன்படி, இவ்வாறு கரும்பு அந்தக் காலத்தில் தவறி, முன்னாலோ அல்லது பின்னாலோ அரைக்கப்படுமானால் அதற்கு மத்திய அரசாங்கத்தினர் எக்ஸைஸ் டியூட்டி ரிபேட் கொடுக்கிறார்கள். அந்த ரிபேட்டை கரும்பு உற்பத்தியாளர்களுக்கு கொடுக்க வேண்டுமென்று இவ்வரசு தெரிவித்துள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, இந்தச் சர்க்கரை ஆலையில் இதுபோன்ற ஸ்டிரைக்குகள் அடிக்கடி ஏற்படுவதால் விவசாயிகள் பெரும் தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில் அரசாங்கம் உடனடியாகத் தலையிட்டு சுமூகமான தீர்வை ஏற்படுத்தி, இனிமேல் பாதிக்காத வகையில் ஏற்பாடு செய்ய செயல் திட்டம் ஏதாவது வைத்திருக்கிறதா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசாராம்: தலைவர் அவர்களே, அந்தச் சர்க்கரை ஆலையிலே வேலை நிறுத்தம் ஏற்பட சரியான காரணம் இல்லை. அரசாங்கம் ஏற்கனவே, ரூ. 25 அதிகமாக, மற்ற மாநிலங்களைக் காட்டிலும், சர்க்கரை ஆலைத் தொழிலாளிகளுக்குத் தனியாக ஊதிய உயர்வு தந்திருக்கிறது. அதற்கு மாறாக சில சூழ்நிலைகளையொட்டி புகலூரிலே ஏற்பட்ட வேலை நிறுத்தம் அரசியலடிப்படி ஏற்பட்டதே தவிர தொழிலாளிகள் பிரச்னையில் அல்ல. அப்படிப்பட்ட நிலையைத் தொழிலாளிகள் இப்பொழுது உணர்ந்திருக்கிறார்கள். இனிமேல் இவ்வாறு நடக்காது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத்தலைவர்: அடுத்து, 1975–76-ம் ஆண்டின் செலவிற்காக முன்பண மான்யக் கோரிக்கைகள் (செலவின கணக்கின்) மீது விவாதமும் வாக்கெடுப்பும். விவாதம் இல்லாமலேயே இதை நிறைவேற்றி விடலாம் என்று அலுவல் ஆய்வுக்குழுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

. . . .